காரணத்தால், பெரும்பாலோர் இறந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் திடீரென்று இந்த நோய் பரவி விடுகிறது. அண்மைக் காலத்தில் இது ஒரு குறிப்பிட்ட அளவில் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இந்தக் காலரா நோய் ஏழைகள் வாழ்கின்ற குடிசைப் பகுதிகளில் அதிகமாகப் பரவி வருகிறதா அல்லது வசதி படைத்தவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அதிகமாக இருக்கிறதா என்ற விவரம் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பொதுவாக குடிநீரில் ஏற்படுகின்ற கலப்புப் பொருள்களினால் இந்த நோய் ஏற்பட்டு வருகிறது. சில நேரங்களில் குடிநீர் வரும் இடத்தில் சாக்கடை நீர் கலந்துவிடுகிறது. கிணறுகளில் உள்ள தண்ணீரிலும் கெடுதல் ஏற்பட்டு, அதைப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்படுகிறது. அதே மாதிரி திறந்து வைக்கப்பட்டு, அசுத்தப் பட்ட தின்பண்டங்களை வாங்கித் தின்பதாலும், இந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் பெரும்பாலும் ஏழை மக்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள்தான் அம்மாதிரியான தின்பண்டங்களையும் வாங்கி உண்கின்றார்கள். மேட்டுக்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இது அதிகமாகப் பரவுவதற்கு வாய்ப்பில்லை.

Pilot Project of Assessment of Total Personality of Students

*321 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any examination of the results of the Pilot Project of assessment of total personality of students in educational institutions has been made; and

(b) if so, the details thereof?

மாணவர்களின் முழு அறிவு வளர்ச்சி மதிப்பீடு பற்றிய முன்னோடித் திட்டம்.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்களின் 'முழு அறிவு வளர்ச்சி மதிப்பீடு' பற்றிய முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ).—ஆம். 'மாணவர் முழு வளர்ச்சி மதிப்பீட்டு முன்னேடித் திட்டம்', தமிழ் நாட்டில் சுமார் 250 உயர்நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் தற்பொழுது செயல்பட்டுவருகிறது. இந்தத் திட்டத்தினல் நல்ல பயன் விளைந்துள்ளது.

திரு. எஸ். கணபதி : தலைவரவர்களே, அனைத்துப் பள்ளிகளுக்கும் இது விரிவாக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லாப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாவட்டந் தோறும் 25 பள்ளிகள் என்ற முறையில் இது அமையப்பெற்று வருகிறது. எல்லாப் பள்ளிகளுக்கும் கொண்டு வருவது என்றல் அங்கு நூலக வசதி, விளையாட்டு அரங்க வசதி இவைகள் இருக்கின்றனவா என்று ஆராயப்பட வேண்டும். ஆகவே எல்லாப் பள்ளிகளுக்கும் விரிவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அரசு செயல்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஓராண்டு காலம் செயல்படுத்தப் பட்டு வந்த இந்தத் திட்டம் ஏதேனும் பயன் அளித்திருக்கிறதா, இதில் ஏதாவது குறைபாடுகள் தெரிந்திருக்கிறதா என்று அரசுக்கு விவரம் கிடைத் திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது மூன்று ஆண்டுக் காலமாக சென்னையில் சைதாப்பேட்டையில் உள்ள மாதிரிப் பள்ளியில் பரிட்சார்த்தமாகச் செயல்படுத்தப்பட்டதில் ஓரளவுக்குப் பயன் அளித்துள்ளதாகவே தகவல் கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. மாவட்ட தலைமைக்கல்வி அதிகாரிகளும் இந்த முறை மாணவர்களுடைய நூலகப் படிப்பு வளர்ச்சியைப் பெருக்குவதற்குப் பயன் உள்ளதாக இருக்கிறது என்ற கருத்து தெரிவித்திருக்கிருர்கள். உடற் பயிற்சி, மற்றவற்றிற்கும் 50 எண்கள் என்று கூறப்படுவதன் காரணமாக, இதற்கு வருகை எண் அதிகரித்து வருகிறது என்று கூறப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த 'முழு வளர்ச்சி மதிப் பீட்டுத் திட்டம்' 200 பள்ளிகளில் அமையப்பெற்றிருக்கிறது என்று கூறப் பட்டது. அவைகளில் அரசுப் பள்ளிகள் எவ்வளவு, தனியார் பள்ளிகள் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடம் இப்பொழுது இல்லை. அரசுப் பள்ளிகளும் தனியார் பள்ளிகளும் இதில் அடங்கியிருக்கின்றன என்று கூறிக்கொள்கிறேன்.